[1995 மார்ச் 28

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காட்டுப் பகுதியிலே மனிதர்கள் நடமாடக்கூடாது என்பதில்லை. இருந்தாலும்கூட, காட்டுப் பகுதியில் 'ஹில் ஸ்டேஷன்ஸ்' என்று சொல்லப்படுகின்ற மலைப் பகுதிகளில் மலைவாழ் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் காட்டுப்பகுதியிலே வந்து செல்லவேண்டியிருக்கிறது. சில பாதைகளில் மலையைக் கடந்து அந்தக் கிராமங்களுக்குச் செல்லவேண்டியிருக்கிறது. அதையெல்லாம் அனுமதித்தாக வேண்டியிருக்கிறது. இருந்தாலும்கூட, அரசு அந்தப் பகுதியிலே வேட்டையாடுவதைத் தடுப்பதற்காக தீவிரமான நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறது. ஆகவே, வேட்டையாடுவது குறைக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கி. தருமலிங்கம்.

திரு. கி. தருமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வன விலங்குகளை வேட்டையாடுபவர்களுக்கு நமது அரசு சட்டத்தின் வாயிலாக குறைந்தபட்ச தண்டனை எவ்வளவு; அதிகபட்ச தண்டனை எவ்வளவு என்பதைத் தங்கள் மூலமாக அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்களுக்கு தண்டனை குறைந்த அளவு ஒரு மாத காலம். அவர்களைக் காவலில் வைக்கலாம். அதுபோன்று, அவர்கள் வேட்டையாடுவதில் எந்தெந்த மிருகங்களை அவர்கள் வேட்டையாடுகிறார்களோ, அதற்கேற்ப அந்த அபாரத் தொகையும் விதிக்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 126, திரு. ஏ.கே.சி. சுந்தரவேல், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

126—

குரிசலாப்பட்டில் கால்நடை மருந்தகம் ஆரம்பித்தல்.

*22980—**திரு. ஏ. கே. சி. சுந்தரவேல் :**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூர் தொகுதி, குரிசிலாப்பட்டில் கால்நடை மருந்தகம் ஆரம்பிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

1995 மார்ச் 28]

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

குரிசிலாப்பட்டில் கால்நடை மருந்தகம் ஆரம்பிக்க தற்போது அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

திரு. ஏ.கே.சி. சுந்தரவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற 4 ஆண்டுக்காலத்திலே, இந்தியாவிலே வேறு எந்த முதலமைச்சரும் எடுக்கமுடியாத அத்தனைச் சாதனைகளைப் படைத்துவரும் எங்கள் புரடசித் தலைவியின் நல்லாட்சியில் குரிசிலாப்பட்டி ஊரைச் சுற்றிலும் சுமார் 50 கிராமங்களுக்கு மேல் உள்ளன. இந்த ஊர் மிகவும் மையமான பகுதி. அங்கேயுள்ள கால்நடைகளின் சிகிச்சைக்காக 15,16 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள திருப்பத்தூர் நகருக்குத்தான் வரவேண்டும். ஏழை விவசாயிகளுக்கு மிகவும் சிரமமாக உள்ளது. டெம்போவில்தான் கால்நடைகளை ஏற்றிவரவேண்டும் 50 கிராமங்களில் சுமார் 30,000 கால்நடைகள் உள்ளன. ஏலகிரி மலையடிவாரத்தில்தான் குரிசிலாப்பட்டி கிராமம் உள்ளதால் தொற்றுநோய் வருகின்ற அபாயம் உள்ளதால் முன்னுரிமை அடிப்படையில் ஒரு காலநடை மருத்துவமனை அமைக்க அமைசசர் முன்வருவாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குரிசிலாப்பட்டி கிராமத்தைச் சுற்றியிருக்கிற கால்நடைகளின் எண்ணிக்கை 8,277 ஆகும். ஏற்கெனவே இந்த கிராமத்தில் கால்நடை கிளை நிலையம் ஒன்று இருக்கிறது. அதோடு இல்லாமல் திருப்பத்தூரில் கால்நடை மருத்துவமனை ஒன்று இருக்கிறது. அதைச் சுற்றி திருப்பத்தூர், மடவாளம் ஆகிய கிராமங்கள் இருக்கின்றன. அதில்லாமல், குரிசிலாப்பட்டில் ஒரு .கால்நடை கிளை நிலையம் ஒன்று இருக்கிறது. இதன் மூலமாக அனைத்து மருத்துவ வசதிகளும் தரப்படுகினறன. முறையாக, கருவூடல் பதிவும் நடைபெறுகிறது. ஆதலால், இங்கே கால்நடை மருத்துவமனை தேவையில்லை என்று அரசு கருதுகிறது.

முற்பகல் 10-35

திரு. ஏ.கே.சி. சுந்தரேவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 1981 சென்ஸஸ் பிரகாரம் 8277 கால்நடைகள் இருப்பதாகச் சொல்கிறார்கள். ஆனால் இப்போது

30 ஆயிரம் கால்நடைகள் இருக்கின்றபடியால், அங்கு குறைந்தது, ஒரு நடமாடும் கால்நடை மருந்தகமாவது அமைத்துத்தர அமைசசர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1981, 1991 என்று மனிதர்களுக்குத் தான் சென்ஸஸ் எடுத்துவரப்படுகிறது. கால்நடைகளுக்கு அப்படி சென்ஸஸ் எடுப்பதில்லை. ஆண்டுதோறும் எடுத்துக் கொண்டிருப்பார்கள்.

வினா எண் 127, திரு. ஏ. ரவிக்குமார், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

127—

பொன்னேரி தொகுதியில் தரைமட்ட அணையைப் பழுதுபார்த்தல்

*16574—**திரு. ஏ. ரவிக்குமார் :**

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர், கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொன்னேரி தொகுதி, இடையஞ்சாவடியில் குசத்தலை ஆற்றின் குறுக்கே உள்ள தரைமட்ட அணை பழுதடைந்துள்ளதால், அதனைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது புதுப்பிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : பொன்னேரி தொகுதி இடையஞ்சாவடியில் குசத்தலையாற்றின் குறுக்கே உள்ள வலது அணையில் ஏதும் பழுதில்லை. இடது பக்க அணையில் சிறிது பழுது ஏற்பட்டது. அவற்றைப் பழுதுபார்க்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு பழுதுபார்க்கும் பணிகள் 1993—ம் வருடம் செப்டம்பர் மாதத்தில் ரூபாய் 77,828-00 செலவில் முடிக்கப்பட்டது.

திரு. ஏ. ரவிக்குமார் : பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலங்களில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தும்போது தங்களுடைய தொகுதிக்கு மட்டுமே செய்து கொள்ளக்கூடிய நிலை இருந்ததாக வரலாறு. ஆனால்